1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன் தங்களுடைய வேகத்தை சொற்களிலே அடக்கமாகச் சொல் லுங்கள். அவர்கள் சொன்ன * என்ற வார்த்தைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அங்கே எல்லோரும் போகிறோம் அதற்காகத்தான் உண்மையைச் சொன்னேன், அதை நிருபிக்கத் தயார். மிஸ்டர் ஜேம்ஸ் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால். ஆகவே இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அரசின் மருத்துவக் கல்லூரிகளிலே கம்யூனிடி அடிப்படையிலே அரிசனங்களுக்கு இத்தனை சதவிகிதம் பின்தங்கிய மக்களுக்கு இத்தனை சதவிகிதம், மற்றவர்களுக்கு இத்தனை சதவிகிதம் என்று தேர்ந்தெடுக்கப்படுகின்ற அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வற்புறுத்து வதற்கு இந்த அரசு ஏன் தயங்க வேண்டும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அரசின் சார்பில் எந்தவிதமான மானியமும் வழங் கப்படாத காரணத்தால், சிறுபான்மை சமுதாயத்தினரால் நடத்தப்படுகின்ற கல்லூரி என்ற காரணத்தினாலும் வற்புறுத்து வதற்கு வழியில்லை.

போளூர் வட்டத்தில் கால்நடை மருத்துவமனைகள்.

*வினா எண். 59—திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் கால்நடை மருத்துவமனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் எத்தனை மருத்துவமனைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்விலுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் ஆறு கால்நடை மருந்தகங்கள் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் செயல்படுகின்றன :—

(1) கலசப்பாக்கம் (2) ஆதமங்கலம்	கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்.
(3) போளூர் (4) கேளூர் (5) களம்பூர்	போளூர் ஊராட்சி ஒன்றியம்.
(6) சேத்துப்பட்டு	சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 பிப்ரவரி 14

(ஆ) மொடையூரில் கால்நடை மருந்தகம் திறப்பதற்கான செயற்குறிப்பு கால்நடை பராமரிப்பு இயக்குநரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. ஜெ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்கள் திறப்பதற்கான நிபந்தனைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்கள் அமைப்பதற்கு கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்:—

(1) கால்நடை நிலையங்கள் கால்நடை எண்ணிக்கையைக் கருதியும், ஏற்கனவே உள்ள கால்நடை நிலையத்தில் அருகாமையைக் கருதியும், எவ்விடத்தில் மிக அவசியமாகத் தேவைப்படுகிறதோ அங்கே அமைக்கப்படுகின்றன.

(2) பஞ்சாயத்து ஒன்றியங்கள் எவ்விடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கவேண்டுமென்று குறிப்பிட்டு தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றவேண்டும்.

(3) நிரந்தரக் கட்டிடம் கட்டும் வரையில் கால்நடை மருந்தகம் உடனே செயல்படுவதற்காக வாடகை இல்லாமல் கட்டிடம் பஞ்சாயத்து ஒன்றியம் ஏற்பாடு செய்யவேண்டும்.

(4) பஞ்சாயத்து ஒன்றியம் ஒரு ஏக்கர் நிலத்திற்குக் குறைவில்லாமல் தரவேண்டும்.

(5) கால்நடை மருந்தகத்திற்குத் தேவையான கட்டிடம் கட்டுவதற்காக கீழே குறிப்பிட்டுள்ளவாறு பஞ்சாயத்து ஒன்றியம் செலவிற்காகத் தனது பங்கினை மேற்கொள்ளவேண்டும்:—

	பஞ்சாயத்து ஒன்றியம்.	அரசு.
முதல் கால்நடை மருந்தகம் அமைக்க	25%	75%
இரண்டாவது கால்நடை மருந்தகம் அமைக்க	50%	50%
மூன்றாவது கால்நடை மருந்தகம் அமைக்க	75%	25%
நான்காவது கால்நடை மருந்தகம் அமைக்க	100%	..

கால்நடை மருந்தகங்கள் திறப்பதற்காக மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்று, பல பஞ்சாயத்து ஒன்றியங்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினலும், அரசு நிதி நிலைமையைப் பொறுத்தும், கால்நடை மருந்தகங்கள் திறப்பதற்காக இடங்களில் ஒப்புநோக்குத் தேவையைப் பொறுத்தும், ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு மருந்தகங்கள் திறக்கவேண்டும் என்பதனை முடிவு செய்கிறது.

1979 பிப்ரவரி 14]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, போளூர் வட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதியில் உள்ள ஜம்னாமத்தூர் என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் திறப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்று அங்கு வந்த அரிசன நலத் துறை அமைச்சர் அறிவித்தார்கள். அது பற்றிய தகவல் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துக் தரமுடியும்.

சின்னசேலம் ஆட்டுப்பண்ணை.

*வினா எண். 60—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்ன சேலத்தில் உள்ள ஆட்டுப்பண்ணையை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, சின்னசேலம ஆட்டுப்பண்ணை மிகப்பெரிய பண்ணை. கிட்ட தட்ட 2000 ஏக்கர் நிலப்பரப்பில் அது அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த ஆட்டுப்பண்ணையை அபிவிருத்தி செய்ய உலக வங்கியிடமிருந்து உதவி பெற்றாவது செய்ய அரசு முன்வருமா? 1967-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட அந்த பண்ணை, தென்னாற்காடு மாவட்டத்தில் மிகப்பெரிய பண்ணையாக விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, உலக வங்கியின் நிதியுதவி பெற்று திட்டங்களைச் செயல் படுத்த, பெரும் திட்டங்களை அனுப்புமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க கால்நடை பராமரிப்பினைப் பொறுத்தவரையில் ரூ. 47 கோடி மொத்தச் செலவில் ஆடு வளர்ப்பிற்காக திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ் வாடு வளர்ப்புத் திட்டத்திற்குத் தேவைப்படும் 33,000 ஆடு களைப் பெறும் பொருட்டு கலப்பின ஆட்டுப்பண்ணை ஒன்றை சின்னசேலத்திலுள்ள ஆட்டுப்பண்ணையில் நிறுவ திட்ட அறிக் கையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது, அவ்வாறு நிறுவப்பட்டால் சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் தற்போதுள்ள வசதிகள் அபி விருத்தி செய்யப்பட்டு பண்ணை விரிவாக்கப்படும்,